விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper In Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 259 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 18 திங்கட்கிழமை (04.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ஊசி மருந்து ஏற்றியதில் தவறு சிறுமியின் கை அகற்றப்பட்டது

### யாழ்.போதனா வைத்தியசாலையில் நடந்த கொடுமை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட எட்டு வயதுப் பாலகியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டமை பற்றி நேற்றைய தினம் வலம்புரி செய்தி வெளியிட்டிருந்தது.

அது தொடர்பில் மேலதிக தகவல் வருமாறு,

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரஸ்தாப சிறுமி காய்ச்சல் காரணமாக தனியார் வைத்தியசாலை 11

## ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவேன்

### சஜித் அறிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கப் பிரதிநிதிகளின் குழு ஒன்று கோயபல்ஸின் ஊடகக் கொள்கையை முன்வைத்து ரணில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் சஜித் போட்டியிடமாட்டார் என்ற போலிச் செய்தியை கட்டமைத்து வருகின்றது. 11

எதிர்வரும் 21ஆம் திகதி

## ஐ.நாவில் பேசவுள்ளார் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

அமெரிக்காவில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுசபைக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 78ஆவது பொதுச் 11

மத ரீதியில்

# இனப் பிரச்சினையை தீவிரப்படுத்த முயற்சி

### ஐ.நா மனித உரிமைகள் பேரவையிடம் தமிழ்க் கட்சிகள் சுட்டிக்காட்டு

*(கொழும்பு)* தமிழர் வாழ்விடங்களில் பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதன் மூலம் மத ரீதியான முறுகல்களைத் தோற்றுவித்து இனப் பிரச்சினையைத் தீவிரப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலக அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டியுள்ள தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், இலங்கைக்குத் தொடர்ந்து கால அவகாசம் வழங்குவதை விடுத்து, இம்முறை கூட்டத் தொடரில் வலுவான அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

*(11ஆம் பக்கம் பார்க்க)*

இலங்கையில்

## நாளொன்றுக்கு 9 பேர் தற்கொலை

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் 4 மணித்தியாலத்துக்கு ஒருவர் என்ற அடிப்படையில் நாளொன்றுக்கு 9 பேர் தற்கொலை செய்துகொள்வதாக பேரா 11

## தமிழர் பகுதிகளில் விகாரைகளை புகுத்துவது சட்டவிரோதமான செயல்

### இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன்



(கொழும்பு)

தமிழர் பகுதிகளில் புகுத்தப்படுகின்ற பௌத்த பண்பாட்டு அம்சங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

வானொலி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் விகாரைகளை புகுத்துவது 11

கடும் மழை காரணமாக

## கொழும்பின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின



11

## மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் ஸ்தலத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் பாடசாலைக்கு அருகாமையில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கீரியான் தோட்டம், பண்டத்தரிப்பு, சில்லாலை என்ற முகவரியில் வசிக்கும் பத்மநாதன் வசீகரன் (வயது-20) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வீதியில் சென்ற வாகனம் ஒன்று 11

## சுகாதார அமைச்சருக்கு எதிரான பிரேரணை

### தமிழ்க் கட்சிகளின் முடிவு நாளை

(கொழும்பு)

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிர்த்து வாக்களிப்பதா? இல்லை நடுநிலை வகிப்பதா? என்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியன நாளை செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற குழு கூடித் தீர்மானிக்கவுள்ளது.

இதேவேளை, 12

கிளிநொச்சியில்

## உழவு இயந்திரம் விபத்து

### சாரதி படுகாயம்

(கிளிநொச்சி)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த 12

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு

திருமதி மேரி வசந்தா
புஸ்பலதா ஞானப்பிரகாசம்
(ஆசிரியர் - யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை)



சேவை விபரம்
- 01.09.1992 - 01.01.2014 வரை யா/மயிலிட்டி றோ.க.த.க.பாடசாலை
- 02.01.2014 - 04.09.2023 வரை யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை

எமது பாடசாலையில் 09 வருடங்கள் ஆசிரியராக சிறப்புற் பணியாற்றி 04.09.2023இல் இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் திருமதி மேரி வசந்தா புஸ்பலதா ஞானப்பிரகாசம் அவர்கள் ஓய்வுக்காலத்தில் உடல், உள, நல சுகத்துடன் வாழ இறையாசீர் கூறுகின்றோம்.
வாழ்க, வளமுடன், வாழ்க, பல்லாண்டு

Best Wishes!

அதிபர், ஆசிரியர்கள்,
யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்
றோ.க.த.க.பாடசாலை, மானிப்பாய்.

(16933)


# மண்மேடு சரிந்து வீழ்ந்து முதியவர் உயிரிழப்பு

மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் 62 வயதான நபர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நாவலப்பிட்டி மாகும்புர பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

புதிதாக மதில் நிர்மாணிப்பதற்காக அத்திவாரம் வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்தபோதே முதியவர் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இதில் படுகாயமடைந்த முதியவர். நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற நிலையிலேயே, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த முதியவர் வேரலுகஸ்ஹின்ன பகுதியை சேர்ந்தவர் ஆவார்.

இந்நிலையில், சடலம் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (4.7)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக
15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 mதூரம்.
- செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(16932)

தொடர்புகளுக்கு:- குரு
076 755 8606,
077 874 3204, 077 288 0152



## நாகபூஷணி திருமண சேவை

MBBS, BSC Civil Engineering, BSC, MSC, LLM, IT Professionals, CIMA, BBA, MBA, BA
கற்று வேலை செய்பவர்கள் மற்றும் Teachers, govt Jobs, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்யப்பட்டு உடன் தரப்படும். (C-7188)

264, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596, 071 999 9306


## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் 2023, 2024 மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஆலய புனரமைப்பு வேலைகளுக்கான கேள்வி கோரல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்காக முறையான சிற்பசாஸ்திர முறைப்படி அதற்கான வர்ணபூச்சு செய்யக்கூடிய வல்லுனர்களிடமிருந்து குறிப்பிட்ட வேலைகளுக்கான தனித்தனி கேள்விகள் கோரப்படுகின்றன.

01. ஆலய முகப்பு இராஜகோபுரம் வர்ணம் தீட்டலும் கோபுரத்தில் இருக்கக் கூடிய சேதங்களை பார்வையிட்டு அவைகள் திருத்துதல்.
02. ஆலய உட்பிரகாரம் கோபுரம் மூன்றையும் உரிய முறையில் வர்ணம் தீட்டியும், சேதம் இருந்தால் அவற்றை சீர்செய்தல்.
03. ஆலய உட்பிரகாரச் சுவர்களின் வெளிப்புறத்தில் உள்ள வர்ணப் பூச்சுகள் வர்ணம் தீட்டுதல் ஏதாவது சேதம் இருந்தால் சீர்செய்தலும், கர்ணகூடுகளுக்கு வர்ணம் தீட்டுதலும்.
04. ஆலய சுவர்களின் உட்புறத்தில் உள்ள சித்திரங்களுக்கும் மீளவும் வர்ணம் தீட்டுதலும் ஏதாவது பாதிப்பு இருந்தால் சீர்செய்தல்.
05. ஆலய தெற்கு வீதியில் உள்ள கேணியில் அமைக்கப்பட்டுள்ள சிற்பங்களுக்கும், ஆலய தெற்கு நுழைவாயில் உள்ள வரவேற்பு கோபுரத்திற்கு வர்ணம் தீட்டுதல் ஏதாவது சேதம் இருந்தால் சீர்செய்தல்.
06. ஆலய விமானம் அதனோடிணைந்த பகுதிகளுக்கு வர்ணம் பூசுதல்.

இவ்வேலைகளுக்கான கேள்வி சமர்ப்பிக்கும் படிவத்தினை 2023.09.15 திகதிக்கு முன்னர் ஆலய நிர்வாகசபை காரியாலயத்தில் பெற்று 1000/= செலுத்தி கேள்விப்பத்திரம் பூரணப்படுத்தி 2023.09.23ஆம் திகதி பி.ப, 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கும்படி "செயலாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு" எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கேள்வி அனுப்பும் உறையின் மேற்பக்க இடது மூலையில் ஆலய புனரமைப்பு வேலைகளுக்கான கேள்வி கோரல் என குறிப்பிட வேண்டும். அல்லது கோயில் நிர்வாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி கோரல் பெட்டியில் இடப்படவேண்டும்.

கிடைக்கப்பெறும் கேள்வி கோரல்கள் 2023.09.23ஆம் திகதி பிற்பகல் 2.10 மணிக்கு திறக்கப்படும். 2.00 மணிக்கு பின்னர் கிடைக்கப்படும் எந்த கேள்வி கோரல்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்வி பத்திரம் அனுப்புவோர் கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றது. அத்துடன் குறிப்பிட்ட கேள்விகளின் மொத்த தொகை எல்லோருக்கும் வாசித்து காட்டப்படும்.

ஆலய அறங்காவலர்சபை யாருக்கு கொடுக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கும். அதுவே இறுதி தீர்மானமாக அமையும். கேள்விப்பத்திரம் அனுப்புவோர் ஏற்கனவே ஆலயங்களில்" வேலை செய்த அனுபவம் உடையவராக இருப்பதுடன் தாங்கள் வேலை செய்த ஆலயத்தின் உறுதிப்படுத்தல் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் வர்ணம் (Paint), கூலி என்பன உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

ஒருவருக்கு ஒரு வேலை மாத்திரம் ஒப்படைக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

| | |
|---|---|
| ப.க.பரமலிங்கம் | ந.மோகனரூபன் |
| தலைவர் | செயலாளர் |
| அறங்காவலர் சபை | அறங்காவலர் சபை |
| ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் | ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் |
| நயினாதீவு | நயினாதீவு |

(C-7190)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23 - 12 - 1947 | 02 - 09 - 2023 |

# பேரின்பநாதன் தவமணி

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பேரின்பநாதன் தவமணி அவர்கள் 02.09.2023 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவநேசம் - ஆரோக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பேரின்பநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை - நேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான தைரியநாதன், தியடோர், செபமணி மற்றும் எழுந்தேற்றம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மரீனா, மரியகாந்தி, மரியதயானி, நவஜீவன், றொசான் ஆகியோரின் பாசமிகு தாயும் தங்கராசா, பீற்றர்யூலியன், வொட்கின்சன், சுலக்சனா, நிரோசா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆன்கிறிஸ்ரலா மக்ஷலோ, எரின்புளோறா, செரபியா, கென்றிக்சன் ஆகியோரின் பேர்த்தியும் பத்திநாதன், அல்வீனம்மா காலஞ்சென்ற சோதிநாதன் மற்றும் அமலோற்பவம், அருட்பணி போல் நட்சத்திரம்(அமதி), எலிசபேத் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை 05.09.2023 செவ்வாய்க் கிழமை பி.ப 3.30 மணிக்கு உரும்பிராய் புனித மிக்கேல் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் உரும்பிராய் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், குருக்கள், துறவிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு
உரும்பிராய். (16935)

தகவல்: குடும்பத்தினர்
077 333 7749, 077 884 0248

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் துதி பாடுவோரை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையிலடைக்க வேண்டும்

## கொதித்தெழும் கடும்போக்கு அரசியல்வாதிகள்

**(கொழும்பு)**

**விடுதலைப்புலிகள் அமைப்பின் தலை வர் பிரபாகரனை துதி பாடுவோரை அரசு உடனடி யாக சிறையில் அடைக்க வேண் டும் என சிங்கள கடும்போக்குவாத பாராளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர, விமல் வீரவன்ச, உதய கம்மன் பில ஆகியோர் கூட்டாக வலியுறுத்தியு ள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு, கிழக்கில் உள்ள ஒரு தரப்பினரும் புலம்பெயர் தமிழ் மக்களும் பிரபாகரனை தேசியத் தலைவராக புகழ்ந்து வருகின்றனர்.

தேர்தல் காலங்களில் தமிழ் அரசியல்வாதிகள் முழுமூச்சாக தங்களுக்கு வாக்குப் பிச்சை கேட்க பிரபாகரனைப் பகிரங்க மாகத் துதி பாடிவருவது வழமை.

இந்நிலையில், மீண்டும் ஜனாதிபதியாக வரவேண்டும் அல்லது பிரதமராக வர வேண் டும் என்ற கனவில் உள்ள முன் னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தற்போது பிரபா கரனைத் துதி பாடியுள்ளார்.

இந்த நாட்டில் பயங்கரவா தத்தை விதைத்து, சொத்துக் களை நாசப்படுத்தி பிரபாகரன் உருவாக பௌத்த பிக்குகளோ அல்லது சிங்கள அரசியல்வாதி களோ காரணம் அல்லர் என் பதை மைத்திரிகளோ அல் லது சிங்கள மக்களோ புரிந்து கொள்ள வேண்டும்.

பிரபாகரனிடம் இருந்த பயங் கரவாத குணத்தாலும் அவரிடம் இருந்த இனவெறியாலுமே அவர் அரச படைகளுக்கு எதிரா கவும் சிங்களவர்களுக்கு எதிராக வும் ஆயுதம் தூக்கினார்.

நாட்டில் இரத்த ஆறு ஓடச் செய்யவிட்ட அவர், இறுதியில் முள்ளிவாய்க்காலில் எமது படை யினரின் தாக்குதலில் மரணத் தைத் தழுவினார்.

முப்பது வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டை நாசமாக் கிய புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனை இனிமேல் யாரும் துதிபாடினால் அவர்களை அரசு பய ங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடை க்க வேண்டும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

# திருமலையில் அமைக்கப்படவுள்ள விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று போராட்டம்



(திருமலை)

திருகோணமலை இலுப் பைக்குளம் பகுதியில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள பொரலுகந்த ரஜ மகா விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து மனித சங்கிலிப் போராட்டம் ஒன்று திருகோணமலை, சாம்பல்தீவு பாலத்திற்கு அருகில் முன்னெ டுக்கப்பட்டது.

. குறித்த போராட்டத்தில் பாரா ளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்ப லம், செல்வராஜா கஜேந்திரன் உட்பட பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.

“பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பௌத்த விகாரை எதற்கு?”, “பெரியகுளம் விகாரை கட்டுமானத்தை உடனடியாக நிறுத்து”, “தொல்லியல் திணை க்களம் பௌத்தத்திற்கு மட்டு மா?”, “தொல்லியல் திணைக்க ளமே இனவாதத்தை தூண் டாதே” என்ற வாசகங்களை ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தை தடுக்கும் முகமாக திருகோண மலை - நிலாவெளி பொலிஸாரி னால் மேற்கொள்ளப்பட்ட விண் ணப்பத்தின் அடிப்படையில் திருகோணமலை நீதிவான் நீதிமன்றினால் குறித்த ஆர்ப் பாட்டத்தில் கலந்து கொள்வத ற்கு 14 பேருக்கு எதிராக தடையு த்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு நிலாவெளி பொலிஸாரினால் குறி த்த தடையுத்தரவு வாசித்துக் காட்டியதையடுத்து திருகோண மலை - நிலாவெளி வீதியின் சாம் பல்தீவு சந்திப் பகுதியில் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டி ருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் சாம்பல்தீவு பாலத்திற்கு அப்பால் சென்று தமது எதிர்ப்பு போராட் டத்தை தொடர்ந்தார்கள். (நி)

# திட்டமிட்டு களமிறக்கப்படும் போலி சிங்களத் துறவிகள்

## புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் 18-20 வய துக்கு இடைப்பட்ட இளைஞர்களு க்கு பயிற்சி அளித்து காவி உடை அணிவித்து அவர்களை அரசி யல் நோக்கங்களுக்காகப் பயன்ப டுத்தும் திட்டமொன்று அமுலில் உள்ளதாக தெரியவந்துள் ளது.

இது தொடர்பில் அரச புல னாய்வுப் பிரிவு தகவல் வெளிப்ப டுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகி ன்றது.

அதற்கமைய, துறவு வாழ்க் கைக்கு அனுமதிக்கப்படும் இளை ஞர்கள் போராட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள், ஆர்ப்பாட்டங் கள் போன்றவற்றில் கவசமாகப் பயன்படுத்தப்படுவதாக புலனா ய்வு அமைப்புகள் சுட்டிக்காட்டியு ள்ளனர்.

இதுவரை சுமார் 500 பேர் பயிற்சி பெற்று துறவிகளாக பய ன்படுத்தப்பட்டுள்ளதாக அரச புலனாய்வு பிரிவினர் இரகசிய அறிக்கையில் அரசாங்கத்திற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் அரசி யல் கட்சி இருப்பதாக புலனாய்வு பிரிவு கண்டுபிடித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன் மூலம் அரசியல் செய ற்பாட்டாளர்கள் சிலரால் தமது அரசியல் கருத்துக்களை பரப்பும் வேலைத்திட்டம் ஒன்று திட்ட மிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் உரிய திணைக்களங்கள் கவனம் செலுத்தப்பட வேண்டு மென புலனாய்வுப் பிரிவினர் அர சாங்கத்திற்கு தெரியப்படுத்தி யுள்ளதாக அரச உள்ளக மட்டத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

# போலி ஆவணங்களைப் பயன்படுத்தி வெளிநாடு செல்ல முயற்சி

## யாழ். இளைஞன் கைது

(கொழும்பு)

போலியான ஆவணங்களை பயன்படுத்தி ஜோர்தான் செல்ல முயற்சித்த 22 வயதான யாழ்ப் பாண இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலை யத்தில் குறித்த இளைஞர் நேற்று அதிகாலை குடிவரவு குடியகல்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எயார் அரேபியா விமான சேவை நிறுவனத்திற்கு சொந்த மான ஜி 9501 என்ற விமான த்தின் ஊடாக ஐக்கிய அரபு அமீரகத்தின் வழியாக ஜோர் டான் நோக்கி பயணம் செய்ய முயற்சித்த போது கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் குறித்த இளைஞரை கைது செய் துள்ளனர்.

இந்த இளைஞர் சமர்ப்பித்த கடவுச்சீட்டு உள்ளிட்ட ஆவணங் கள் தொடர்பில் எழுந்த சந்தேக த்தை அடுத்து அது குறித்து விசாரணை செய்தபோது இவை போலி ஆவணங்கள் என்பது தெரிய வந்துள்ளது. . (நி)

# அஸ்கிரிய மஹா நாயக்க தேரர் கிழக்கு ஆளுநர் திடீர் சந்திப்பு

(கண்டி)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று முன் தினம் கண்டி அஸ்கிரிய மஹா நாயக்க தேரர், மல்வத்து மஹா நாயக்க தேரர் ஆகியோரை சந்தி த்து ஆசி பெற்றதுடன் கலந்துரை யாடல்களிலும் ஈடுபட்டுள்ளார். (நி)

## ஒரு வாரத்திற்குள் பரீட்சைப் பெறுபேறுகள்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சைப் பெறு பேறுகள் எதிர்வரும் ஒரு வாரத்திற்குள் வெளியிட ப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவி த்துள்ளார். (நி)

## சீரற்ற காலநிலையால் ஒருவர் உயிரிழப்பு

(ஹற்றன்)

இலங்கையில் நிலவும் சீர ற்ற காலநிலை காரணமாக நான்கு மாவட்டங்களுக்கு மண் சரிவு அபாய எச்சரிக்கை விடு க்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாவலப்பிட்டி மாஹகும்புரு பகுதியில் மண் மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒரு வர் உயிரிழந்துள்ளதாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

புதிய மதிலுக்கான அஸ்தி வாரம் வெட்டிக் கொண்டிரு ந்தவரின் உடல் மீது மண் மேடு விழுந்தது.

குறித்த மண்மேடு அகற்ற ப்பட்டு நாவலப்பிட்டி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

நாவலப்பிட்டி, வெரலுகசி ன்ன பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய நபரே உயிரிழந் துள்ளார்.

மண்சரிவு அபாயம் விடுக் கப்பட்டுள்ள நிலையில் அவதா னமாக செயற்படுமாறு பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுக்க ப்பட்டுள்ளது. (நி)

## சியம்பலாபிட்டிய வைத்தியசாலையில்

(கொழும்பு)

நிதி இராஜாங்க அமை ச்சர் ரஞ்சித் சியம்பலா பிட்டிய நேற்று திடீரென வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளதாக செய் திகள் வெளியாகியுள்ளன.

உணவு நச்சுத்தன்மை காரணமாக அவர் நோய்வாய் ப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்ப டுகிறது. (நி)

## மசகு எண்ணெய்யின் விலை தொடர்ந்தும் அதிகரிப்பு

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை தொடர்ந்தும் அதிக ரிப்பை பதிவு செய்து வருகி றது.

இதன்படி, டபிள்யூ. ரி. ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 85.55 அமெரிக்க டொலராக நேற்று பதிவாகியு ள்ளது.

அத்துடன், பிரென்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 89 அமெ ரிக்க டொலரை அண்மித்து ள்ளது.

எனினும் இயற்கை எரி வாயு பீப்பாய் ஒன்றின் விலை, வீழ்ச்சியை பதிவு செய்து 2.76 அமெரிக்க டொலராக நிலவுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய ஆண்கள் 5 பேர் ஹாக்கி பாகிஸ்தானை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது இந்தியா




அடுத்த ஆண்டு நடைபெறும் முதலாவது 5 பேர் ஹாக்கி உலகக் கிண்ண தொடருக்கு தகுதிச்சுற்றான ஆசிய மண்டல ஆண்கள் தொடர் ஓமன் நாட்டின் சலாலா நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

இந்தத் தொடரில் லீக் சுற்று முடிவில் 5 போட்டிகளில் 4 வெற்றி, 1 தோல்வி உடன் அரையிறுதிக்கு முன்னேறிய இந்திய அணி, 10-4 என்ற கோல் கணக்கில் மலேசியாவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஆசிய ஆண்கள் 5 பேர் ஹாக்கி இறுதிப் போட்டியில் இந்தியா, பாகிஸ்தானுடன் மோதியது.

இந்தப் போட்டி 4-4 என்ற கோல் கணக்கில் சமன் ஆன நிலையில் ஷூட் அவுட் முறை கொண்டு வரப்பட்டது. இதில் 2-0 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வீழ்த்தி இந்தியா வெற்றி பெற்றது.

இதன்மூலம் இந்திய அணி அடுத்த ஆண்டு நடைபெறும் முதலாவது 5 பேர் ஹாக்கி உலக கிண்ண தொடருக்கும் தகுதி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (நி)

# 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினர் ஜோகோவிச், அல்காரஸ்


ஒவ்வொரு ஆண்டும் அவுஸ்திரேலிய ஓபன், பிரெஞ்ச் ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் ஆகிய 4 வகையான கிராண்ட்ஸ்லாம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற டென்னிஸ் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாமான 143 ஆவது அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயார்க் நகரில் கடந்த திங்கட்கிழமை தொடங்கி வரும் 10 ஆம் திகதி வரை நடக்கிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு 3 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் நோவக் ஜோகோவிச் (செர்பியா), லாஸ்லோ ஜெரியை சந்தித்தார். விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் முதல் 2 செட்களை இழந்த ஜோகோவிச், அதன்பிறகு தனது அனுபவ ஆட்டத்தின் துணையுடன் சரிவில் இருந்து அபாரமாக மீண்டதுடன் வெற்றியையும் தன்பக்கம் திருப்பினார்.

சுமார் 3 மணி 45 நிமிடம் நீடித்த இந்தப் போராட்டத்தில் ஜோகோவிச் 4-6, 4-6, 6-1, 6-1, 6-3 என்ற செட் கணக்கில் லாஸ்லோ ஜெரியை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இதேபோல், ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்காரஸ், அமெரிக்காவின் டான் ஈவான்சுடன் மோதினார். இதில் அல்காரஸ் 6-2, 6-3, 4-6, 6-3 என்ற செட் கணக்கில் வீழ்த்தி 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (நி)

# புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த சிம்பாவே கிரிக்கெட் வீரர் உயிர் பிரிந்தது



சிம்பாவே கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் ஹீத் ஸ்ட்ரீக் காலமானதாக அவரது மனைவி உறுதி செய்துள்ளார்.

நீண்டகாலமாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த ஹீத் ஸ்ட்ரீக் நேற்றுக் காலை உயிரிழந்ததாக அவரது மனைவி தனது முகநூல் கணக்கில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்ட பதிவில், இன்று(நேற்று) அதிகாலையில், ' என் வாழ்க்கையின் மிகப் பெரிய அன்பு மற்றும் என் அழகான குழந்தைகளின் தந்தை, தனது வீட்டில் இருந்து தேவதூதர்களுடன் இருக்க அழைத்துச் செல்லப்பட்டார் என தெரிவித்துள்ளார்.

இறக்கும் போது அவருக்கு 49 வயது. நோய்வாய்ப்பட்டிருந்த ஹீத் ஸ்ட்ரீக் சில நாட்களுக்கு முன்னர் இறந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அது பொய் என்பதை அவரே உறுதிப்படுத்தியிருந்த நிலையில் நேற்று அவர் காலமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2905

**விஜயா**

மாதத்துக்கு ஒரு முறை தான் சம்பளம் வருது... ஆனா ஆசைகள் மட்டும் முப்பது நாளைக்கு 300 விதமாக வருது...



**கோபிதன்**

முதலாம் திகதி பிறந்தா வாடகை தரணும் என்று தெரியாதா...?



ஐயா நான் ஆறாம் திகதி பிறந்தவன்...

**கஸ்தூரி**

காலண்டர் - வெங்காயத்தை உப்பில் சேர்த்து சாப்பிட்டு வர இரத்த வாந்தி வராமல் குணமாகும்



காலண்டர் ல தேதி கிழிக்க வந்தது ஒரு குத்தமா டா...

**தர்சிகன்**

டேய் உடனே பணம் தேவை ஒரு 5000 ரூபாய் google pay பண்ணுடா...



நானே கூகுள்ல இன்றைக்கு எந்த கோவில்ல சோறுபோடவாங்கனு search பண்ணிக்கிட்டு இருக்கேன்மா...

**மாதவி**

ஒரு பெண்மணி பக்கத்து வீட்டு காரரிடம் ..

"எங்க மாமியார் ஊருக்கு போறாங்க கொஞ்சம் பஸ் ஸ்டாண்டில் பஸ் ஏத்தி விட்டு போங்களேன்!!??"

"எந்த பஸ்லமா ஏத்தி விடனும்???"

"பிரேக் பிடிக்காத பஸ் எதுவானாலும் பரவாயில்லை..!!"

**நிஷாந்**

வர வர

ஒரே குழப்பமா இருக்கு...

இந்த செல்போனை

நம்ம வச்சிருக்குறோமா...

இல்ல இந்த...

செல்போன்

நம்மளை வச்சுருக்குதா?

உங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சியில் முதலாவது படைத் தலைமையகத்தினால் முல்லைத்தீவு திருமுருக்கண்டியில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பத்திற்கு புதிய வீடு நிர்மாணித்து வழங்கப்பட்டது.

(படம்- யதுபாஸ்கரன்)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இளங்கலைஞர் மன்றத்தால் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தப்படும் தெய்வீக இசை அரங்கு நிகழ்வில் நாளை 5 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு இசையரங்கு இடம் பெறும்.

இதில் பாட்டு- மயூரதி குகனேஸ்வரன், வயலின்- ப.சியாம்கிருஷ்ணா, மிருதங்கம்- ம.லோகேந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து 7.15 மணிக்கு மெண்டலின் இசை இடம் பெறும்.

இதில் மெண்டலின்- விஸ்வநாத ஐயர் சிவகுமார், வயலின்-கே.வேலதீபன், மிருதங்கம்-கே.பிரணவகரன், கஞ்சிரா- மு. சுலக்சன் , முகர்சிங்- நி. மோகனதர்சன் ஆகியோர் பங்கு பற்றவுள்ளனர். (நி)

## மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லி மாநகர் மகாஜனக் கல்லூரி ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத சிதம்பரேஸ்வரர் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் இன்று திங்கட்கிழமை காலை 9.36 மணிக்கு நடைபெறும். (நி)

# ஹெரோயினுடன் இளைஞன் கைது

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெள்ளாம் போக் கட்டி பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொடிகாமப் பொலிஸாரின் சோதனை நடவடிக்கையின் போதே 32வயதான இளைஞன் ஒருவர் 240கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைதாகியுள்ளார். (நி-30)




## நல்லூரானே! நல்வழி காட்டு!

வெவ் வினைகள் வேரறுக்கும் வேலவனே!
நம் இளையோர் திருந்திடவே வழிகாட்டு
தினம் தினம் அவலம் தரும் ஆபத்து அழிந்திட
முருகா- வழிகாட்டு
அநியாயம் அக்கிரமம் அடாவடித்தனம்
மறைந்திட துன்பங்கள் தொலைந்திட
முருகா! வழிகாட்டு
கொலை, களவு , காம விரோதங்கள்
மறந்திட விரைந்து நீ வழிகாட்டு
மனம் மரத்து மடிகின்ற உயிர் தன்னைக்
காத்திட மயிலேறி வந்து ஒளி ஊட்டு
நல்லூரானே! நல் வழிகாட்டு

வ.காந்திமதிநாதன்,
கொற்றாவத்தை.

## மயில் ஏறி வந்த கோலன்

ஆதிசிவன் தந்த பாலன்- எந்தை
ஆறுமுகன் கந்த-வேலன்
சோதி மயில் வந்த கோலன்- சிவ
சுப்பிரமணியன் பவ காலன்
சிவநாதனின் அனல்மேல் விழி
வழியாக வரும் ஒளியாகவே
கங்கை அனல்காற்று தாங்கவும்- அந்த
வானமும் பூமியும் ஓங்கவும்
வழிவாகியே நடமாடியே
வலமே பெற விளையாடிய
நல்லூரில் அருள் தர வந்தவன்.

கலாபூஷணம் செ. பரமநாதன்
மண்டைதீவு.


## யாழ்ப்பாணம் மாநகரசபை

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

**ஏலம் கோருவது தொடர்பான அறிவித்தல்- 2023**

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிகக் கடைகள் அமைப்பதற்கான ஏலம் கோரப்படவுள்ளன.

❖ ஏலம் கோரவுள்ள திகதி :- **05.09.2023 முற்பகல் 10.00 மணிக்கு**

மேற்படி ஏலமானது ஏலம் கோரப்படவுள்ள கடைகளிற்கான இடங்களில் நடைபெறும். இது தொடர்பான மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளினை மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் அறிந்து கொள்ள முடியும். கடை தொடர்பான வரைபடத்தையும் பார்வையிடலாம்.

மாநகர ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(சி-7189)


# இராசிபலன்

04.09.2023
ஆவணி 18,திங்கட்கிழமை
பஞ்சமி முன்னிரவு 10.39 மணிவரை

அச்சுவினி பிற்பகல் 3.43 மணிவரை
சுபநேரம்-12.05-1.35 மணிவரை
இராகுகாலம்-7.35-9.05 மணிவரை

சந்திராஷ்டமம்-
உத்தரம் , அத்தம்

வளவன்

**மேஷம்**
தேகநலனில் அக்கறை கூடும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கடகம்**
வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**துலாம்**
செய்தொழில் மேன்மையுண்டு, திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**மகரம்**
செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**ரிஷபம்**
தொழில் ரீதியாக பயணங்கள் இடம்பெறலாம், ஒரு வேலையை முடிக்க சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**சிம்மம்**
சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்,பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

**விருச்சிகம்**
பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**கும்பம்**
குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், போசன சுகமுண்டு.

**மிதுனம்**
இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், மற்றவர்கள் பாராட்டும் வகையான காரியமொன்றை செய்வீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**கன்னி**
மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**தனுசு**
நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மீனம்**
தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், எதிர்பாராத தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு,சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

உங்களின் பாரங்களைக் கடவுளிடம் கொடுத்து விடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்திற்கான
## தேர்தல்கள் அலுவலகம் திறந்து வைப்பு





(அராலி)

தேர்தல்கள் திணைக்களம் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் அலுவலகத்தின் ஏற்பாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்திற்கான பிராந்திய தேர்தல்கள் அலுவலகம் நேற்று யாழ்ப்பாணம் பழைய பூங்காவிற்கு அருகாமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக தேர்தல்கள் திணைக்கள நாயகம் தவிசாளர் க.ஸ்ரீ சமன் ஸ்ரீ ரத்தனநாயக்க கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இதில் தேர்தல்கள் திணைக்கள செயலாளர் ஆர்.ப.கேரத், தேர்தல்கள் திணைக்கள உறுப்பினர் ஏ.பாயிஸ், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாண மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஆ.அமல்ராஜ், பிரதேச செயலாளர்கள், உதவி தேர்தல் ஆணையாளர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-104)

## யாழ்.சிறைச்சாலையில்
## கைதிகளின் பயிற்சிக்காக 'சலூன்'



(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் சிறைக் கைதிகளுக்கு பயிற்றுவிப்பதற்கான முடி வெட்டும் நிலையம் நேற்று முன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

வேலுப்பிள்ளை சிவனேஸ்வரனது நிதிப் பங்களிப்பில், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஆனந்தராஜாவின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-30)



158 ஆவது ஆண்டு பொலிஸ் தினத்தை முன்னிட்டு நேற்று புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர், தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படம்- தேவானந்தன்)

# ஆட்கடத்தலில் ஈடுபட்ட ஐவர் கோப்பாய் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டு பகுதியில் ஆள்கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், கிளிநொச்சி, கனகாம்பிகை குளம், கரடிப்போக்கு சந்தி, பரந்தன் ஆகிய பகுதிகளை சேர்ந்த 21 மற்றும் 22 வயதுடைய ஐந்து இளைஞர்கள் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்வியங்காட்டு பகுதியில் பழ வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர், வான் ஒன்றில் வந்த கும்பலால் கடத்தி செல்லப்பட்டுள்ளதாக, நேற்று முன்தினம் சனிக்கிழமை உறவினர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடத்தப்பட்ட நபர், நபர் ஒருவரிடம் 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பணம் வாங்கியதாகவும் அதனை மீள செலுத்தாத நிலையில் இரு தரப்புக்கும் இடையில் பிரச்சினை நிலவிவந்த நிலையில், குறித்த நபர் கடத்தப்பட்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், கடத்தல் கும்பல் கிளிநொச்சியில் மறைந்திருப்பதாக கோப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற ரகசிய தகவலின் அடிப்படையில், கிளிநொச்சிக்கு விரைந்த பொலிஸார் கடத்தல் கும்பலை கைது செய்துள்ளதுடன் கடத்தப்பட்டவரையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-33)

# வயல் நிலத்தினை முழுமையாக விடுவியுங்கள்
## ஜெயபுரம் மக்கள் கோரிக்கை விடுப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி ஜெயபுரம் கிராம மக்கள் தமது வயல் நிலத்தினை முழுமையாக பெற்றுத் தருமாறு கிளிநொச்சி மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். 1983 ஆம் ஆண்டு ஜெயபுரம் குடியேற்ற திட்டம் உருவாக்கப்பட்டது.

தென்னிலங்கையில் வன் செயல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என இக்குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டது. மேட்டுக் காணிகள் தொடக்கத்தில் வழங்கப்பட்டிருந்தாலும் தேவன் குளத்தின் கீழ் 550 ஏக்கர் வரையான நிலப்பரப்பு ஜெயபுரம் மக்களுக்கு என வயல் நிலங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

போரச் சூழல் காரணமாக வயல் நிலங்களை மக்கள் முழுமையாக துப்புரவு செய்ய முடியவில்லை. 2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின்னர் வயல் நிலத்தினை முழுமையாக வழங்குமாறு ஜெயபுரம் மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வரும் நிலையில் தற்போது வரை 130 ஏக்கர் வரையான வயல் நிலம் மட்டுமே விவசாயிகளுக்கு கிடைத்துள்ளது.

தற்போது தேவன் குளம் புனரமைக்கப்பட்டு வருவதன் காரணமாக தேவன் குளத்தின் கீழான ஜெயபுரம் மக்களுக்கு உரிய வயல் நிலத்தினை முழுமையாக விடுவிப்பதற்கு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-350)

# யோகக்கலை கற்கைநெறி

(கொழும்பு)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கை நெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் காலை 8 மணிவரை நடைபெறும் இவ்வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும். சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயில விரும்புவோர் வட மாகாண கல்வி அமைச்சில் விண்ணப்பப் படிவங்களை பெற்று கல்வி அமைச்சு, வட மாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (நி-102)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 200 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 550 | 600 |
| தக்காளி | 200 | 150 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| கோவா | 250 | 200 | 200 | 250 |
| கரட் | 350 | 300 | 350 | 400 |
| பூசணி | 80 | 100 | 80 | 80 |
| புடோல் | 100 | 80 | 100 | 150 |
| வாழைக்காய் | 180 | 200 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 200 | 240 |
| பாகற்காய் | 450 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 80 | 80 | 200 |
| கருணைக் கிழங்கு | 150 | 170 | 160 | 200 |
| பயற்றங்காய் | 200 | 150 | 120 | 250 |
| லீக்ஸ் | 200 | 180 | 180 | 200 |
| பீற்றூட் | 180 | 140 | 100 | 150 |
| கறிமிளகாய் | 350 | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 | 200 |
| போஞ்சி | 450 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 160 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 60 | 120 |
| தேசிக்காய் | 800 | 600 | 600 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 50-80 |
| இராசவள்ளி | 350 | 400 | 350 | 350 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 200 | 400 |
| முள்ளங்கி | 100 | 80 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 | 50 |
| வல்லாரை | 40 | 160 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 70 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# சேம்பு/சேனைக்கிழங்கு



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical name :- Colocasia esuculenta
Family :- Araceae
English :- Taro
Sinhala :-Gahala

பெரிய செடி இனத்தைச் சேர்ந்தது. தரை மட்டத்திலிருந்து தண்டு காணப்பட மாட்டாது. அடிப்பகுதி பகுத்துக் காணப்படும். அடிப்பகுதியானது குழாயுருவான மட்ட நிலத் தண்டிலிருந்து உருவாகும். தனியிலை, பெரிய இலையாகக் காணப்படும். 15-48 செ.மீ நீளமான இலைகள். இதய வடிவ இலைகள், சாம்பல் சேர்ந்த கரும்பச்சை நிறமான இலைகள், இலைக் காம்பு 90-120 செ.மீ நீளமானது. பழங்கள் கோள வடிவின, ஈரலிப்பான பாகங்களில் நன்கு வளரக்கூடியது.

இதன் இலைகள், இலைத் தண்டு, வேர்க்கிழங்கு, அனைத்துமே மருத்துவப் பண்புகள் நிறைந்தவை. மருத்துவ முக்கியத்துவமுடைய மூலிகை மட்டுமல்ல சிறந்த உணவாகவும் அமைந்து விடுகிறது. இதனுடைய கிழங்கு, தண்டு, இலை என்பன சிறந்த மரக்கறியுமாகும்.

இதன் இலைகளில் பீற்றா கரோட்டின், உயிர்ச்சத்து C, போலிக்கமிலம், றிபோபிளேவின், உயிர்ச்சத்து B, இரும்பு, கல்சியம், பொட்டாசியம், பொஸ்பரஸ், மக்னீசியம்போன்ற உயிர்ச்சத்துக்களும் கனியுப்புக்களும் காணப்படுகின்றன. முக்கியமாக அதிகளவு நார்ச்சத்துக் காணப்படுகிறது.


சேனைக்கிழங்கை இந்தியாவில் உணவிற்காகவே பயிரிட்டு வளர்ப்பார்கள். குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடியது. அதாவது தட்ப வீரியமுள்ளது. இதன் இலைகளுக்கு மூல நோயைக் குணப்படுத்தும் தன்மையுண்டு.

"சேம்பிலைக்கு நற்புளியைச் சேர்த்து சமைத்துண்டால் கூம்பிட்ட மூல மறுங் கூறு" கபத்தைப் பெருக்கக் கூடியது. மருந்தின் குணத்தைக் கெடுக்கும். எனவே மருந்துண்ணும் காலத்தில் சேனைக்கிழங்கை எடுக்கக் கூடாது. உடலுக்கு குளிர்ச்சியையும் கொடுக்கக்கூடியது.
"வாத கபத்தை யுள்ளே வைத்திருக்குத் தின்றக்கால் கோதிலாத் தொண்டை தனிற் கோழை கட்டும்-மாதரசே"
உண் மருந்தின் தற்குணத்தை ஒட்டுஞ் சேம்புக் கிழங்கு தண்மேக சாந்தியென்பர்தாம்.

இலைத்தண்டின் சாறா து வெட்டுக்காயங்களினாலுண்டாகும் குருதியை நிறுத்தும். புண்களைச் சீக்கிரத்தில் ஆற்றும். காதுவலி, காதுச்சீழ் முதலியவற்றுக்கு இதன் இலைத் தண்டுச்சாறு இரண்டொரு துளி விடலாம்.

குளவி முதலியன கொட்டின வாயில் இதன் இலைக் காம்பின் சாற்றில் தடவ வலி நீங்கும். நெறிக்கட்டிகளுக்கு சேம்புத் தண்டின் சாற்றுடன் உப்புச் சேர்த்து வெளிப்பிரயோகமாகப் பூச அவை அமுங்கும்.

சேம்புக்குப் புளி சேர்த்து சமைத்துண்ணலாம். ஆசை பற்றியே "சிறியார்க் கினியதைக் காட்டாதே, சேம்பிற்கு புளியிட விடையாதே" என்னும் பழமொழியும் வழங்கலாயிற்று.



### சேமத்தண்டு மசியல்

நிறைய நார்ச்சத்து சேமத் தண்டில் உண்டு. சேமத்தண்டுகள் - 3. தண்டின் தோலைச் சீவி அகற்ற வேண்டும். பின்பு தண்டுகளை சிறுசிறு துண்டுகளாக வெட்ட வேண்டும். நறுக்கிய சேமத் துண்டுகளை பழப் புளித் தண்ணீர் விட்டு கொதிக்க வைக்க வேண்டும். சிறிது நீரில் சேர்த்து மென்மையாக அவித்த பின்பு தண்டுகளை எடுத்து மசித்து வைத்துக் கொள்ளவும். பின்பு வாணலியை அடுபேற்றி ஒரு மேசைக்கரண்டி நல்லெண்ணெய் விட்டு எண்ணெய் சூடானதும் கடுகு, அரிந்த வெங்காயம், செத்தல் மிளகாய், மஞ்சள்தூள் சேர்த்து அளவான உப்பும் சேர்த்து வதங்கியதும் மசித்த சேமத்தண்டுகளை சேர்த்து சிறிது நீரும் சேர்த்து 5 நிமிடங்கள் கொதிப்பித்து இறக்க வேண்டும். குடலைச் சுத்தமாக வைத்திருக்க உதவும்.

மலத்தை இளக்கி வெளியேற்றும். பசிமந்தத்தை நீக்கக் கூடியது. மாதத்தில் இரண்டு தடவைகள் இதனைச் சமைத்துச் சாப்பிடலாம்.

### சேம்பு மொட்டு புளிக் குழம்பு

சேம்பு மொட்டுக்களைச் சேமித்து வெளித்தோலை நீக்கி குருத்துக்களை மட்டும் சேகரிக்க வேண்டும். மொட்டுக்கள் மஞ்சள் நிறமாக இருக்க வேண்டும். மொட்டுக்களை சிறுசிறு துண்டுகளாக வெட்டி அலசி நீரில் வேக வைக்க வேண்டும். பழப்புளியை நீரில் ஊற வைத்து பிசைந்து எடுத்த நீரை சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

மொட்டுக்கள் நன்கு வெந்ததும் நன்றாகக் கடைந்து கொள்ளவும். கடைந்த சேம்பு மொட்டுக்களுள் கரைத்த புளிக் கரைசலை சேர்த்து தேவையானளவு மிளகாய்த்தூள் சேர்த்து பின்பு 2 தக்காளியையும் கரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

பின்பு வாணலியை அடுப்பேற்றி நல்லெண்ணெய் சிறிது விட்டு சூடானதும் கடுகு, வெந்தயம், கறிவேப்பிலை சேர்த்து வதங்கியதும் கடைந்த சேம்பு மொட்டு, தக்காளி சேர்த்து புளிக்கரைசலையும் சேர்த்து தேவையானளவு உப்புச் சேர்த்து நன்கு கொதிக்க வைத்து இறக்கிக் கொள்ளவும்.

செரிமானத்தைத் தூண்டும் குடற்புழுக்களை நன்கு வெளியேற்றும், சிறுநீரை நன்கு கழியச் செய்யும், மலத்தை இளக்கி வெளியேற்றும், ஆரோக்கியத்திற்கு மிகவும் உகந்த இயற்கையான சேம்பு மொட்டுக் குழம்பாகும். மூலநோய் உள்ளவர்கள் தாராளமாக பயன்படுத்தலாம். ஆனால் மிளகாய்த்தூள் குறைவாகச் சேர்க்க வேண்டும்.

### சேம்பு இலை

சேம்பு இலையின் நரம்புகளை நீக்கி இலைகளைக் கொய்து எடுத்துக் கொள்ளவும். துவரம் பருப்பு, உள்ளி, வெங்காயம், செத்தல் மிளகாய் நீரைக் கொதிக்க வைத்து துவரம்பருப்பை வேகவிட்டு வேகும் போது அரிந்த வெங்காயம், உள்ளி சேர்த்து வேக வைத்து வெந்ததும் இறக்கி வைக்கவும். இன்னொரு மண்சட்டி அடுப்பேற்றி நீர் விட்டு கொய்த இலைகளைப் போட்டு வேகவிட்டு வெந்ததும் நீரை வடிகட்டி எடுத்து விடவும். மண்சட்டியை அடுப்பேற்றி சூடானதும் 2 தேக்கரண்டி எண்ணெய் விட்டு கொதித்ததும் அரிந்த வெங்காயம், செத்தல் மிளகாய் சேர்த்து வதங்கியதும் கடைந்த சேம்பு இலை, துவரம்பருப்பு சேர்த்து மஞ்சள் தூள், தேவையான அளவு உப்பு சேர்த்து அவித்து கடைந்து எடுக்கவும். குடற் புழுக்களை அகற்றக் கூடியது. தோல் தொற்றுக்கள் அடிக்கடி ஏற்படுபவர்கள் சேம்பு இலை, துவரம் பருப்பு சேர்ந்த சேம்பு இலை அடையை சமைத்து சாப்பிடலாம். மாதத்தில் 4 தடவைகள் சமைத்துப் பயன்படுத்தலாம்.

### மூலரோகத்திற்கு சிறந்த சேம்பு மொட்டு- வயல் நண்டு மூலிகைக்கறி

சேம்பு மட்டுமல்ல வயல் நண்டும் சிறந்த ஜீவ மருத்துவ பொருளாகும். நீர்ப்பாங்கான இடங்களிலுள்ள மஞ்சள் நிறமான சேம்பு மொட்டுக்களை சேகரித்துக் கொள்ள வேண்டும். சேம்பு மொட்டுக்களை தோலை உரித்து சிறுசிறு துண்டுகளாக வெட்டி புளியங்காய்களை சேகரித்து மண்சட்டியில் போட்டு நீர்விட்டு கொதிக்க வைத்து விடவும். வெந்ததும் தனியாக எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். இன்னொரு சட்டியில் சேம்பு மொட்டுகளை வேக வைக்க வேண்டும்.

புளியங்காய் கரைசலை நன்கு கடைந்து ஓடு நீக்கி வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். இப்புளியங்க கரைசலை அடுப்பேற்றி மிளகாய்தூள் உப்பு சேர்த்து வேக விட்டு இதனுள் சேம்பு மொட்டுக் கரைசலையும் சேர்த்து இறக்கிய பின்பு வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு கடுகு, வெந்தயம், உள்ளி சேர்த்து தாளித்து மேற்படி கரைசலினுள் சேர்த்து துப்பரவாக்கிய வயல் நண்டையும் சேர்த்து கொதிப்பித்து இறக்கவும்.

வயல் நண்டு ஒவ்வாமையை ஏற்படுத்தாது. நல்ல செரிமானத்தைக் கொடுக்கும். இரத்தத்தை சுத்திகரிக்கக் கூடியது. முக்கியமாக வயிற்றுப் புழுக்களை அகற்றக் கூடியது.

### சேம்புக் கிழங்கு குழம்பு

சேம்புக் கிழங்குகளை சேகரித்து கழுவி நன்கு அவித்து உரித்து பெரிய துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்ளவும். பழப்புளி தேவையானளவு எடுத்து நீரில் ஊற வைத்துக் கொள்ளவும். வாணலியை அடுப்பேற்றி சிறிதளவு நல்லெண்ணெய்விட்டு கொதித்ததும் கடுகு, அரிந்த சின்ன வெங்காயம், இடித்த உள்ளி, வெந்தயம் போட்டு ஓரளவு வெந்ததும் கரைத்து வைத்த பழப்புளி கரைசலை வடித்து விட்டு கொதிவந்ததும் மஞ்சள் தூள், மிளகாய்த் தூள், தேவையானளவு உப்பு, பெருங்காயம் போட்டு கொதித்ததும் அவித்து வெட்டி வைத்த சேனைக் கிழங்குகளை போட்டு 5-10 நிமிடங்கள் கொதித்ததும் இறக்கி பயன்படுத்தவும்.

மிகவும் ஆரோக்கியமானதும் குடலின் செயலை சீராக்கக் கூடியதும் குறைந்த கலோரியும் நிறைந்த நார்த்தன்மையும் கொண்டதும் ஆகும்.

சேனைக்கிழங்கில் மக்னீசியம், பொட்டாசியம், உயிர்ச் சத்து B6, E செம்புச் சத்தும் காணப்படுகின்றது. நார்ச்சத்து அதிகமாக காணப்படுவதால் குடலில் இயக்கத்தை சீராக்கும். பொட்டாசியச் சத்து காணப்படுவதால் இருதய செயற்பாட்டை சீராக்கும்.

சேம்புச் செடியில் உயிர்ச்சத்து A,E,C காணப்படுவதால் புற்றுநோய் ஏற்படாமல் தடுப்பதோடு நோய் எதிர்ப்பாற்றலையும் அதிகரிக்கச் செய்யும். வயிற்றுப் பொருமல், மலக்கட்டை நீக்கக் கூடியது. இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்.

இதில் காணப்படும் பொட்டாசியம் ஆனது இரத்த அழுத்தத்தை சீராக வைத்திருக்க உதவக்கூடியது. இரத்தத்தில் சீனியின் அளவையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவும்.

ஏனெனில் இதில் காணப்படும் நார்த்தன்மையும் காபோவைதரேற்றையும் கட்டுப்படுத்தும் தன்மையுமே யாகும். (Fibre and resistant starch)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 273





எப்படித் திடீரென்று மறைந்திருப்பாள்? இது என்ன மாயமா, மந்திரமா? அங்கே ஏதாவது பள்ளம் இருந்திருக்குமோ? ஓட்டமும் நடையுமாகப் போய்ச் சுமாராகப் பூங்குழலி எங்கே நின்று மறைந்தாள் என்று தோன்றியதோ, அந்த இடத்துக்கு வந்தான் அங்கே நின்று நாலா பக்கமும் பார்த்தான். மூன்று பக்கங்களில் அவள் போயிருக்க முடியாது. போயிருந்தால் தன் கண்ணிலிருந்து மறைந்திருக்க முடியாது. அவ்விடத்தில் காலை ஜாக்கிரதையாக ஊன்றி வைத்துப் பார்த்துச் சேறு கிடையாது என்பதையும் நிச்சயப்படுத்திக் கொண்டான். ஆகையால், மேட்டின்மேல் ஏறிக் காட்டுக்குள்தான் போயிருக்கவேண்டும்.

இன்னும் கொஞ்சம் உற்றுப் பார்த்ததில், குத்துச் செடிகள் அடர்ந்த அந்த மேட்டில் ஏறுவதற்கு, ஒற்றையடிப் பாதை ஒன்று இருப்பது தெரிய வந்தது. வந்தியத்தேவன் அதில் ஏறினான். ஏறும்போது திக் திக் என்று அடித்துக் கொண்டது. அங்கே கலங்கரை விளக்கின் மங்கிய வெளிச்சமும் வரவில்லை. மாலைப் பிறை முன்னமேயே கடலில் மூழ்கி மறைந்துவிட்டது. மினு மினுத்த நட்சத்திரங்களின் வெளிச்சத்திலே வழியையும் கொஞ்ச தூரத்துக்கு அப்பால் காணவில்லை. குத்துச்செடிகளும் குட்டை மரங்களும் பயங்கர வடிவங்களைப் பெற்றன. அவற்றின் நிழல்கள் கரிய பேய்களாக மாறின. செடிகளின் இலைகள் ஆடியபோது நிழல்களும் அசைந்தன. ஒவ்வோர் அசைவும் வந்தியத்தேவனுடைய நெஞ்சை அசைத்தது. அந்தக் கரிய இருளிலும் நிழலிலும் எங்கே, என்ன அபாயம் காத்திருக்கிறதென்று யார் கண்டது? விஷ ஜந்துக்கள், கொடிய விலங்குகள் பதுங்கியிருந்து பாயலாம். அபாயம் மேலிருந்து வரலாம் பக்கங்களிலிருந்தும் வரலாம் பின்னாலிருந்தும் வரலாம். அடடா! இது என்ன, இங்கே வந்து அகப்பட்டுக் கொண்டோம்? கையில் வேலைக்கூட எடுத்து வரவில்லையே?

அது என்ன சலசலப்புச் சத்தம்? அந்த மரத்தின்மேல் தெரியும் அந்தக் கரிய உருவம் என்ன? அந்தப் புதரின் இருளில் இரண்டு சிறிய ஒளிப் பொட்டுக்கள் மின்னுகின்றனவே, அவை என்னவாயிருக்கும்?

வந்தியத்தேவனுடைய கால்கள் அவனை அறியாமல் நடுங்கின. சரி! சரி! இங்கே என்ன நமக்கு வேலை? எதற்காக இங்கு வந்தோம்? என்ன அறிவீனம்? உடனே இறங்கிப் போய்விட வேண்டியது தான்.

இறங்கலாம் என்று எண்ணித் திரும்ப யத்தனித்த தருணத்தில் ஒரு குரல் கேட்டது. நெஞ்சைப் பிளக்கும் குரல் பெண்ணின் குரல். ஒரு விம்மல் சத்தம். பிறகு இந்தப் பாடல்:

"அலை கடலும் ஓய்ந்திருக்க
அகக்கடல்தான் பொங்குவதேன்?
நிலமகளும் துயிலுகையில்
நெஞ்சகந்தான் விம்முவதேன்?

வந்தியத்தேவன் அம் மேட்டிலிருந்து கீழே இறங்கிச் செல்லும் யோசனையை விட்டுவிட்டான். குரல் வந்த இடம் நோக்கி மேலே ஏறினான். விரைவில் மேட்டின் உச்சி தெரிந்தது. அங்கே அவள் நின்று கொண்டிருந்தாள். பூங்குழலிதான். பாடியது, அவள் தான். வானத்தில் சுடர்விட்ட நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டு பாடினாள். அந்த விண்மீன்களையே அவளுடைய பாட்டைக் கேட்கும் ரஸிக மகா சபையாக நினைத்துக் கொண்டு பாடினாள் போலும்!

நட்சத்திரங்களில் ஒன்று தூமகேது. அதிலிருந்து கிளம்பிய கதிரின் கத்தை நீண்ட தூரம் விசிறி போல் விரிந்து படர்ந்திருந்தது. மேட்டின் உச்சியில் அப்பெண்ணின் நிழல் வடிவமும், அவளுடைய குரலும் கீதமும், வானத்தில் தூமகேதுவும் சேர்ந்து வந்தியத்தேவனைத் தன்வயமிழக்கச் செய்தன.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## கொக்கரக்கோ சேவலே..



ஒரு அழகிய இயற்கை எழில் கொஞ்சும் கிராமம். இப்போ இருக்கிற எந்தவித வசதிகளும் இல்லாத மலை காடுகளுக்கு அடியில் வாழும் மக்கள் நிரம்பிய சிறிய கிராமம். அங்க நம்ம கிட்டு இருந்தது. கிட்டுக்கு அழகான இளஞ்சிவப்பு நிறத்தில் இறக்கைகள், நல்ல வளர்ந்த ரத்த சிவப்பில் கிரீடம் போன்ற கொண்டை. பார்ப்பதற்கு அத்தனை அழகு நம்ம கிட்டு என்கிற சேவல். அதை விட அவனது குரல் மிகவும் வசிகரமானது. அவன் கூவும் போது அவனுக்கே ஒரு மமதை ஏற்பட ஆரம்பித்தது.

கிட்டு அதன் குரல் மீது ஏற்பட்ட கர்வத்தால், அதனுடன் இருக்கும் மற்ற மிருகங்களை மதிப்பதில்லை. மேலும் மற்ற கோழிகளிடம் தனது அதிகாரத்தை பயன்படுத்தி வந்தது. மிருங்களுக்கு அதன் மேல் வெறுப்பு இருந்தது ஆனால் அதன் குரலுக்காக எதுவும் சொல்லாமல் இருந்தன. சில மிருகங்கள் இவன் கண்டிப்பாக எங்கயாவது படுவான் அப்போது தெரியும் என்றும் இருந்தன.

கிட்டு செய்வது தவறு என யாரும் முன் வந்து கூறவில்லை. இப்படியே நாட்கள் சென்றன. கிட்டு காலையில் கூவுவதற்கே அலுத்து கொண்டான். இந்த மனிதர்களுக்காக கூவுவதால் தன்னுடைய குரல் தான் வீணாகி போகிறது. இருந்தாலும் நான் கூவவில்லை என்றால் இவர்களுக்கு எப்படி விடிந்தது என்று தெரியும் என்று அலுத்து கொண்டே கொக்கரக்கோ என கூவியது.

வழக்கம் போல மற்ற மிருங்கங்களை மிரட்டி கொண்டே இருந்தது கிட்டு. மலையில் சரியாக இரை கிடைக்காத ஒரு பெரிய கழுகு ஒன்று கிராமத்தில் ஏதாவது கிடைக்கும் என பறந்தது. கழுகு பார்வை என்று கூறுவார்கள். அந்த அளவுக்கு கழுகு கண்கள் கூர்மையாக இருக்கும். ஆனால் அன்று என்னவோ கழுகுக்கு சரியாக ஏதும் கண்களில் படவில்லை. சிறியதாக எதாவது விலங்குகள் கிடைத்தால் கூட பரவாயில்லை என்ற எண்ணத்தில் பறந்தது கழுகு.

சிறிது நேரம் சுற்றிதிருந்தும் கழுகு கண்களில் சிக்கவில்லை. ஆனால் அதன் காதுகளில் ஒரு குரல் கேட்டது. எதோ ஒன்று கூவுவது போல, சத்தம் வந்த திசை நோக்கி பறந்தது கழுகு. அது வேற யாரும் இல்ல நம்ம கிட்டு தான். மற்ற மிருகங்களை தன் குரலால் மிரட்டவே கொக்கரக்கோ என கூவி கொண்டிருந்தது.

அது இருந்த மமதையில் கழுகு பறந்து வரும் சத்தத்தை கவனிக்கவில்லை. மற்ற மிருங்கள் பயந்து ஒளிவதை கண்ட கிட்டுவிற்கு இன்னும் குஷி ஆனது. இன்னும் சத்தமாக கூவியது. மிருகங்கள் கழுகைப் பார்த்து ஒளிந்தது கிட்டுக்கு தெரியவில்லை.

அவ்வளவுதான் ஒரே தூக்கு கழுகு கிட்டுவை தூக்கி கொண்டு பறந்தது. தனக்கு சரியான வேட்டை என கழுகு நினைத்தது. குரல் மேல் இருக்கும் கர்வத்தால் மதி மறந்து நடந்து கொண்டோமே என வருந்தியது கிட்டு.

குழந்தைகளே உங்களுக்கு ஒரு திறமை இருக்கிறது என்றால் அதை வைத்து மற்றவர்களை எப்போதுமே அதிகாரம் செய்ய கூடாது. அதற்கு பதிலாக அந்த திறமையை மேலும் மெருகேற்றி சிறப்படையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நீதியே ஆட்சியின் உயிர்.நடுநிலைமையே நீதியின் உயிர்.
>
> – *ஜஸ்டினியன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் எதிரியான அமைச்சர் விதுர

ஆட்சியில், அரச பணிகளில் இருப்பவர்கள் நடுநிலையுடன் செயற்பட வேண்டும்.

அவ்வாறு நடுநிலையுடன் செயற்பட முடியாது என்று கருதினால், அவர்கள் தங்களின் பதவிகளைத் தூக்கி எறிந்துவிட்டு தாங்கள் எந்த மதத்தை, எந்த இனத்தை கடுமையாக நேசிக்கிறார்களோ அதற்காக அவர்கள் பாடுபடலாம்.

இதைவிடுத்து அமைச்சுப் பதவியில் இருக்கின்ற ஒருவர் தான் சார்ந்த மதத்துக்காகப் பக்கம் சார்ந்து கருத்துரைப்பாராயின், அவர் அமைச்சருக்குரிய பண்புகளை இழந்து விட்டார் என்பதுதான் பொருள்.

ஆம், பௌத்த சாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க குருந்தூர்மலை தொடர்பில் தெரிவித்த கருத்தானது, இன வன்மத்தைத் தூண்டிவிடுகின்ற நோக்கில் திட்டமிட்டுத் தெரிவிக்கப்பட்டதென்பது மறுதலிக்க முடியாத உண்மை.

குருந்தூர்மலையானது ஆதி சிவன் ஆலயம் அமைந்த வரலாற்றுப் பெருமைமிக்க இடம்.

அந்த இடத்தில் தமிழ் மக்கள் காலாகாலமாக ஆதி சிவனை வழிபட்டு வருகின்றனர்.

இங்கு பௌத்தர்களுக்கு இடமில்லை என்பதை நியாயம் உரைக்கவல்ல பௌத்த பிக்குகள் சிலர் வெளிப்படையாகக் கூறியுள்ளனர்.

அதாவது குருந்தூர்மலையில் பௌத்த விகாரை இருக்கவில்லை என்பதை அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

அதேநேரம் குருந்தூர்மலையில் எந்தவிதமான கட்டுமானப் பணிகளும் இடம்பெறக் கூடாது என முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இருந்தும் நீதிமன்ற உத்தரவையும் மீறி அங்கு விகாரைக்கான கட்டுமானப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில் தொல்லியல் திணைக்களம் நீதிமன்ற உத்தரவை மீறியுள்ளதென்பதையும் நீதிமன்ற உத்தரவை அமுல்படுத்துகின்ற கடமைப் பொறுப்பிலிருந்து பொலிஸார் தவறியுள்ளனர் என்பதையும் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் தனது கட்டளையில் குறித்துரைத்துள்ளது.

நிலைமை இவ்வாறாக இருக்கையில், மிகவும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டிய பௌத்த சாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தன்னை ஒரு பௌத்த மதவாதியாக வெளிப்படுத்தியுள்ளதுடன் தனது அமைச்சுப் பதவி இந்த நாட்டின் அனைத்து மக்களுக்குமானதென்பதை மறந்து தமிழ் மக்களுக்கு விரோதமாகக் கருத்துரைத்துள்ளார்.

உண்மை. குருந்தூர்மலையிலுள்ள விகாரையை எவரும் கேள்விக்குட்படுத்த முடியாது. குருந்தூர்மலைக்குச் சென்று பௌத்தர்கள் வழிபடுவதை யாரும் தடுக்க முடியாது என பௌத்த சாசன அமைச்சர் கூறுகிறார் எனில், அது பௌத்த சிங்களவர்களைத் தமிழ் மக்களுக்கு எதிராகத் தூண்டிவிடுகின்ற சதி என்பது உணர்தற்குரியது.

அதிலும் நீதிமன்ற உத்தரவுகள் இருக்கையில், இவ்வாறானதொரு கருத்தை அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவிப்பதானது, நீதிமன்ற உத்தரவை கருத்தில் எடுக்காமல், பௌத்த சிங்களவர்கள் குருந்தூர்மலைக்குச் சென்று அங்கு விகாரை அமைக்கின்ற பணியை மேற்கொள்வதுடன் வழிபாட்டையும் மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தை மறைமுகமாக தெரிவிப்பதாக உள்ளது.

ஆக, ஓர் அமைச்சர் இவ்வாறு கருத்துரைப்பது இந்த நாட்டில் இன, மத ஒற்றுமை ஏற்படுவதை ஆட்சியாளர்கள் விரும்பமாட்டார்கள் என்ற உண்மை மீளவும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

### கச்சதீவு தொடர்பில்

# நிரந்தரமான,தெளிவான தீர்வு எட்டப்பட வேண்டும்

**சித்தார்த்தன் எம்.பி**

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு இலங்கையிடம் இருக்கிறதா அல்லது இந்தியாவிற்கு கொடுப்பதா என இவைகள் சம்பந்தமாக அந்த இரண்டு நாடுகளும் தெளிவாக ஆராய வேண்டும் என தமிழீழ விடுதலை கழகத்தின் (புளொட்) தலைவரும் இலங்கையின் பாரளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, ஊடகவியலாளர் ஒருவர் தமிழ் நாட்டு மீன்வள அமைச்சர் கச்சதீவை மீட்கவேண்டும் என கூறியுள்ளார். இது குறித்து தங்களது நிலைப்பாடு என்ன? என வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆரம்ப காலங்களில் இந்தியா வைத்திருந்ததாகவும் பின்னர் இலங்கைக்கு கொடுக்கப்பட்டதாகவும் பல உண்மைகளும்கதைகளும் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இது ஒவ்வொரு தடவையும் இலங்கை இந்தியாவிற்கு கொடுப்பதும், இந்தியா இலங்கைக்கு கொடுப்பதுமாக இல்லாமல் ஒரு நிரந்தரமான சரியான முடிவு எடுக்கப்பட்டு செய்யப்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் எனது நோக்கம்என அவர்மேலும் தெரிவித்தார். (4-7)

### முன்னாள் ஜனாதிபதி கோட்டா

# எகிப்துக்கு சுற்றுலா

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடுத்த சில வாரங்களுக்குள் எகிப்து செல்ல திட்டமிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி பதவியை விட்டு வெளியேறிய கோட்டாபய ராஜபக்ஷ இரண்டு தடவைகள் துபாய், மியன்மார் போன்ற நாடுகளுக்கு உல்லாசப் பயணங்களுக்காக சென்றிருந்தார். இம்முறை எகிப்து செல்கிறார்.

தனது எகிப்து பயணத்தின் போது பெரும்அனுபவமாக கருதப்படும் நைல் நதியை ஒட்டிய நைல் குரூஸ் பயணத்தில்கோட்டாபயவும்இணைந்துகொள்ள திட்டமிட்டுள்ளார். (4-7)

### யாழ்ப்பாணத்தில்

# கூரியர் பணத்தை வழங்காது ஊழியரை தாக்கியவர் மறியலில்

(யாழ்ப்பாணம்)

கூரியரை வாங்கிவிட்டு பணம் கொடுக்காது கூரியர் வழங்க சென்ற ஊழியரை வீட்டுக்குள் அழைத்து சென்று தாக்கிய நபரை இளவாலை பொலிஸார் கைது செய்து மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் மன்று அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தாக்குதலுக்கு இலக்கான ஊழியர் இளவாலை பொலிஸ்நிலையத்தில்மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து தாக்குதலாளியை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

மன்றில் நடைபெற்ற வழக்கு விசாரணைகளை தொடர்ந்து சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (4-7)

# நாளுக்கு நாள் அதிகரிக்கும் டெங்கு நோய்த் தாக்கம்

**பொது மக்களுக்கு எச்சரிக்கை**

(கொழும்பு)

நாட்டில் இதுவரையில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 62,000ஐத் தாண்டியுள்ளது.கடந்த எட்டு மாதங்களில் இதுவரை 62,029 டெங்கு நோ்யாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, டெங்கால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 38 ஆக உயர்ந்துள்ளது. கடந்த சில வாரங்களில் இனங்காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள போதிலும், நாட்டின் தென்மேற்கு பகுதியில் பெய்து வரும்கடும்மழையுடன் மீண்டும்டெங்குநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு பல பிரதேசங்களை டெங்கு அபாய வலயங்களாக அறிவித்துள்ளது. கடந்த இரண்டு வாரங்களில் டெங்கு பாதிப்பு குறைந்துள்ள போதிலும் சுகாதார அதிகாரிகள் நாடு முழுவதும் பல விழிப்புணர்வு மற்றும் டெங்கு ஒழிப்பு திட்டங்களைத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# கடற் பிராந்தியங்களில் காற்றின் வேகம் அதிகரித்து வீசக்கூடும்

**வளிமண்டலவியல் திணைக்களம்**

(கொழும்பு)

தென்மேற்கு பருவப்பெயர்ச்சி மழை காரணமாக கடல் பிராந்தியங்களில் காற்று அதிகரித்த வேகத்தில் வீசக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

சில சந்தர்ப்பங்களில் மணித்தியாலத்துக்கு 60 முதல் 70 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை முதல் பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களிலும் புத்தளம் முதல் மன்னார் ஊடாக திருகோணமலை வரையான கடற்பிராந்தியங்களிலும் மணித்தியாலத்துக்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக் கூடும்.

குறித்த பிராந்தியங்களில் கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள் அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (4-7)

# அதிகாரிகளின் தவறுகளால் மாணவர்களுக்கு பெரும் அநீதி

**எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு**

(கொழும்பு)

தற்போது உயர்தரப் பரீட்சைக்கான பாடத்திட்டம் சரியாக பூர்த்தி செய்யப்படவில்லை என்றும், தற்போதைய நிலைவரப்படி 2022 உயர் தர பரீட்சைப் பெறுபேறு முடிவுகள் கூட வெளியிடப்படாமல் உள்ளதோடு,2023 ஆம்ஆண்டு உயர் தரப்பரீட்சை நவம்பரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும், 2022 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

முறையாக நடக்குமாக இருந்தால் இந்த உயர் தர பாட போதனைகளை மார்ச் 2024 வரை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அதிகாரிகளின் வசதிக்காகவே இவ்வாறு மேற்கொள்ளப்படுவதாகவும் அவர்களின் வசதிக்காக உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் பிள்ளைகள் பலிகடாவாக ஆக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தது.

கல்வி அமைச்சின் அதிகாரிகளின் தவறினாலேயே உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் கூட தாமதமாகியுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளது. (4-7)

# நாட்டை பாதுகாப்பதில் அனைவருக்கும் பங்குண்டு

**வஜிர அபேவர்தன**

(கொழும்பு)

நாட்டைப் பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பு எனவும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தி நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடு செய்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணையாவிட்டால், பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவை சந்திக்க நேரிடும்.

அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தேசியக் கொள்கையொன்றை நாம் உருவாக்க வேண்டும்எனவும் தெரிவித்த அவர் எதிர்க்கட்சிகள் பொறுப்பை புறக்கணித்த போது பின்னடைவில் இருந்த நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீட்டுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு



23

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

லைபனானின் மொத்த மக்கள் தொகையில் 78 சதவீதம் பேர் வறுமைக் கோட்டுக்கும் கீழே தள்ளப்பட்டுவிட்டனர். அவர்களில் 30 லட்சத்துக்கும் மேற்பட்டோர் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றனர்.

டொலருக்கு நிகரான அந்நாட்டு நாணய மதிப்பு சரிந்துவிட்டது. முடங்கிப் போன வங்கிகளால் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் வங்கியிலிருந்து பணம் எடுக்க முடியாமல் செயலற்றுத் தவிக்கின்றனர். எரிபொருளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. நாளின் பல மணி நேரங்களுக்கு மின்தடையை மக்கள் சந்தித்து வருகின்றனர். இதனால் மருத்துவமனைகள் பெரிதும் முடங்கி விட்டன.

உயிர் காக்கும் மருந்துகளின் கையிருப்பு மருந்துக் கடைகளில் இல்லை. புற்றுநோயாளிகளுக்குக்கூட மருந்துகள் கிடைப்பதில்லை. கறுப்புச் சந்தையில் பல மடங்கு பணம் கொடுத்தால்தான் மருந்துகளை வாங்க முடியும் எனும் நிலை உருவாகியுள்ளது.

வாங்கிய கடனை திருப்பி செலுத்தவே முடியாமல் திணறும் லைபனான் 150 ஆண்டுகளில் இல்லாத பொருளாதார் நெருக்கடியை சந்தித்துள்ளதாக கூறும் உலக வங்கி, ஐ.நா, பிரான்ஸ், அமெரிக்கா உதவினாலும் நெருக்கடியிலிருந்து மீள லைபனானுக்கு 19 ஆண்டுகள் பிடிக்கும் என தெரிவித்துள்ளது. லைபனான் இப்போது சந்தித்திருக்கும் இத்தகைய நெருக்கடியான நிலைக்கு குளறுபடியான அரசியல், ஊழ்ல் மற்றும் மோசமான பொருளாதார கொள்கையே காரணம் என்கிறார்கள் அரசியல் வல்லுநர்கள்.

ஒரு காலகட்டத்தில் வெளிநாடுகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்களின் அந்நிய செலாவணி மிக அதிகமாக லைபனானுக்கு வந்தது. எனவே லைபனான் இலங்கை போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியதுடன், அங்கு கட்டடங்கள் வீதிகள் என்பன அமைக்கப்பட்டன. அதற்காக கடன்களும் பெறப்பட்டன. உள்நாட்டு கடன்கள்,வெளிநாட்டு கடன்கள் என அதிகம் கடன்கள் பெறப்பட்டன. ஒரு கட்டத்தில் லைபனானில் அவர்களுடைய டொலருக்கு நிகரான லீரா என்ற நாணயத்தின் பெறுமதியை இறக்குமதியாளர்களுக்கு ஒரு விதமாகவும் ஏனையவர்களுக்கு வேறொரு விதமாகவும் நிர்ணயித்தார்கள்.

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அங்கு அரசியல் பிரச்சினையும் நிலவிக் கொண்டிருந்தது. முஸ்லிம், கிறிஸ்தவர்கள் பிரச்சினை பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு தொடர்பான பிரச்சினை என்பன காணப்பட்டன. லைபனான் பணப்புழுக்க நெருக்கடி ஒகஸ்ட் 2019 இல் முழுமையாக வெளிப்பட்டது. மேலும் லைபனானில் COVID-19 தொற்று நோய் (இது 2020 இல் தொடங்கியது) மற்றும் 2020 பெய்ரூட் துறைமுக வெடிப்பு ஆகிய இரண்டாலும் மேலும் மோசமடைந்தது. பெரும்பாலும் இறக்குமதியை சார்ந்திருக்கும் லைபனானின் பெய்ரூட் துறைமுகம் கடந்த 2020 ஒகஸ்ட் 4 ஆம் திகதி அமோனியம் நைட்ரேட் வெடி விபத்தால் தரைமட்டமானது. 200இற்கும் அதிகமானோர் உயிரிழந்த இந்த பேரழிவால் ஒரு லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கு சேதம் ஏற்பட்டது. இது பொருளாதாரத்தை மேலும் முடக்கியது.

நெருக்கடி உச்சம் அடைந்த போது இலங்கை போன்றே லைபனானும் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லமாட்டோம் என்று கூறி வந்தது. அதுமட்டுமன்றி கடன் செலுத்த முடியாத வங்குரோத்து நிலைமைக்கு நாங்கள் செல்ல மாட்டோம் என்றும் லைபனான் கூறிக்கொண்டு வந்தது. பொருளாதாரச் சீர்திருத்தங்களை உடனடியாக அமுல்படுத்த ஒப்புக்கொண்டு, உலக வங்கியிடம் கடன் பெற்று மக்களைக் காப்பாற்றப் பாருங்கள் என்று லைபனான் ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்தது ஐ.நா.

லைபனானின் பொருளாதாரச் சிக்கல் இன்னமும் தீர்ந்ததாய் இல்லை. (ஒரு பாரிய பொருளாதார வீழ்ச்சியைச் சரி செய்ய 10-20 வருடங்கள் தேவை). அங்கு எவ்வித முன்னேற்றமும் இல்லை. மாறாக நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டே போகிறது. எவ்வித தீர்வையும் லைபனானால் கண்டடைய முடியவில்லை. அவற்றைக் கண்டடைவதற்குரிய அரசியல் மற்றும் நிதி சீர்திருத்தங்கள் தொடர்பான எவ்வித முடிவுகளையும் அவர்களால் இதுவரை எட்ட முடியவில்லை. நிலைமை கைமீறிப்போய்விட்டதாக IMF சொல்கிறது.கூடவே, "வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளில் ஒன்று" என்று இதை அவர்கள் வர்ணிக்கிறார்கள்.

இலங்கையிலும் இதே நிலையே காணப்பட்டது. முன்னர் கூறியது போன்ற பல காரணங்களினால் இலங்கையின் கடன்மதிப்பீடும் (credit rating) மிகவும் கீழ்நிலையை அடைந்து விட்டது. இதனால் வெளிநாடுகளும் இலங்கைக்கு கடன் கொடுக்கத் தயார் நிலையில் இல்லை. இலங்கைக்கு எந்த விதமான "கருணை"யையும், சலுகையையும் அளிக்க சீனாவும் தயங்குவதாக தெரிகிறது. இந்தியாவைப் பொறுத்தவரையில் நீண்டகால நட்புறவையும், மனிதாபிமானத்தையும் கருதி இந்த துயர சூழலில் இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டிக் கொண்டிருக்கிறது. இலங்கையின் பொருளாதாரம் உலக வங்கியின் தயவினால் மட்டுமே மீண்டெழ முடியும் என்ற நிலையை அடைந்ததால் உலக வங்கியின் எந்தவிதமான கிடுக்கிப்பிடி நிபந்தனைகளையும் சிறிதுகூட மறுக்க இயலாத நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டிருக்கிறது. உலகவங்கியின் ஒரு நிபந்தனையே கடன்மறுசீரமைப்பாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டுக்கு அமைவாக கடன்களை மறுசீரமைப்பது மிகக் கடினமான விடயம் என்று சுட்டிக்காட்டியுள்ள பொருளியல் நிபுணர்கள், இருப்பினும் கடன் மறுசீரமைப்பு என்பது ஒரு சத்திர சிகிச்சையை போன்றது என்றும் அதனை ஒரே முறையில் சரியாக செய்து முடிக்க வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

### கடன் மறுசீரமைப்பு என்றால் என்ன?

நீங்கள் கடனைத் திருப்பிச் செலுத்தாத அபாயத்தில் இருக்கும் போது கடன் மறுசீரமைப்பு பொதுவாக நடக்கும். நீங்கள் பெற்ற கடனுக்கான ஒப்பந்தத்தின் விதிமுறைகளை மாற்ற நீங்கள் கடன் வழங்குநருடன் இணைந்து பணியாற்றி ஒரு புதிய ஒப்பந்தத்தினை உருவாக்கிக் கொள்ளவேண்டும். இது கடன் மறுசீரமைப்பு எனப்படுகிறது. கடன் மறுசீரமைப்பில் பெற்ற கடனுக்கான வட்டி விகிதத்தை குறைத்தல், கடன் திருப்பிச் செலுத்தும் காலத்தை நீடித்தல் அல்லது கடன் நிலுவை குறைத்தல் போன்றவை நடைபெறும். இதனை வேறொரு முறையில் சொல்வதானால், கடன் மறுசீரமைப்பு என்பது ஒரு மறுநிதியளிப்பு செயல்முறையாகும், இதன் மூலம் பணப்புழுக்க சிக்கல்களை எதிர்கொள்ளும் நிறுவனம் கடன் வழங்குபவர்களுடன் சாதகமான அல்லது நெகிழ்வான விதிமுறைகளை மறுபரிசீலனை செய்ய ஒரு ஏற்பாட்டில் நுழைகிறது. அதன் மூலம் தங்களை திவால் நிலையிலிருந்து காப்பாற்றுகிறது.

கடன் மறுசீரமைப்பு ஒரு கடனாளி நிதிக் கொந்தளிப்பில் இருக்கும் போது திவால் நிலையை அடையும் முன் மீள் எழுச்சி பெற குறைந்த செலவில் மாற்றீட்டை வழங்குகிறது. மேலும் இது கடன் வாங்குபவர் மற்றும் கடன் வழங்குபவர் ஆகிய இருவரின்நலனுக்காகவும் செயற்படுகின்றது.

கடன் மறுசீரமைப்பு உத்தியானது கடன் மறுசீரமைப்புச் செய்ய விரும்பும் நிறுவனத்தின் பிரதிபிம்பத்தை (image) கணிசமாக மோசமடையச் செய்து, ஊழியர்களிடையே மன உறுதியைக் குறைக்கும். இருப்பினும், நிறுவனத்தை திவால் நிலையிலிருந்து காப்பாற்ற, அத்தகைய ஏற்பாடு புறக்கணிக்க முடியாத ஒரு விருப்பமாக இருக்கலாம். மேலும், மறுசீரமைப்பு நடந்தவுடன், மற்ற நிறுவனங்களிடமிருந்து கூடுதல் கடனைப் பெறுவது மிகவும் சவாலானதாகவும் இருக்கும்.

இது குறுகிய காலத்தில் நிறுவனத்தை திவால் நிலையிலிருந்து காப்பாற்றலாம். ஆனால் கடன் மறுசீரமைப்பிற்குப் பிறகு அது சீராக வேலை செய்யும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. கடன் மறுசீரமைப்புத் திட்டம் நிறுவனத்தின் அல்லது தனிநபரின் கடன் வாங்கும் திறனைப் பாதித்தாலும், அது ஒரு முக்கியமான செயற்பாடாகும். இது அவர்களின் பிரதிவிம்பத்தை மீண்டும் உருவாக்க அல்லது தொடர்ந்து செயற்படும் திறனை அவர்களுக்கு வழங்குவதற்கான ஒரு போராட்ட வாய்ப்பை வழங்குகிறது.

மேலும், இது வணிக செயற்பாட்டில் இருக்க வேண்டிய உடனடி கோரிக்கைகளை பூர்த்தி செய்ய தேவையான பணப்புழக்கத்தை பாதுகாப்பதோடு, இது கடனாளிகளுக்கு கடன் கொடுத்தவர்களிடமிருந்து சட்டபூர்வ பாதுகாப்பை வழங்குகிறது மற்றும் அவர்களின் சொத்துக்களை கரைந்து போக விடாமல் பாதுகாக்கிறது.

### கடன் மறுசீரமைப்பு எவ்வாறு செயற்படுகிறது

சில நிறுவனங்கள் திவால் வாய்ப்பை எதிர்கொள்ளும் போது தங்கள் கடனை மறுகட்டமைக்க முயல்கின்றன. கடன் மறுசீரமைப்பு செயல்முறை பொதுவாக கடனளிப்பவர்கள் கடன்களுக்கான வட்டி விகிதங்களைக் குறைக்க ஒப்புக்கொள்வது, நிறுவனத்தின் பொறுப்புகள் செலுத்தப்பட வேண்டிய திகதிகளை நீடிப்பது அல்லது இரண்டையும் உள்ளடக்கியது. இந்தச் செயல்முறை படிகள் நிறுவனம் தனது கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கும் வணிகத்தில் தங்குவதற்குமான வாய்ப்புகளை மேம்படுத்துகிறது. நிறுவனம் திவால் அல்லது கலைப்புக்கு தள்ளப்பட்டால், அவர்கள் இன்னும் குறைவாகப் பெறுவார்கள் என்பதை கடனாளர்கள் புரிந்து கொள்கிறார்கள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பின்...

கொழும்பில் நேற்றுப் பெய்த கடும் மழை காரணமாக கோட்டை, மருதானை, பஞ்சிகாவத்தை, பொரளை, சேதவத்தை, ஆமர் வீதி உள்ளிட்ட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பல பகுதிகளில் மரங்கள் முறிந்து விழுந்ததில் வீதிகள் தடைப்பட்டுள்ள அதேவேளை பல வாகனங்களும் சேதமடைந்துள்ளன.

கொழும்பு - கிராண்பாஸ் உள்ளிட்ட பகுதிகளில் பல வணிக வளாகங்களுள் நீர் ஊடுருவியுள்ளதால் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (4-7)

## ஐ.நாவில்...

சபைக் கூட்டத்தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நியூயோர்க்கில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒற்றுமையை மீண்டும் உருவாக்குதல் எனும் தொனிப்பொருளின் கீழ் ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தொடர் இடம்பெறவுள்ளது. (4-7)

## நாளொன்றுக்கு...

தனைப் பல்கலைக்கழக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு தற்கொலை செய்து கொள்பவர்களில் 40 வீதமானோர் கல்வி கற்றவர்கள் எனவும் அவர்களுள் 22 வீதமானோர் பட்டப்படிப்பை முடித்தவர்கள் எனவும் குறித்த ஆய்வு சுட்டிக் காட்டியுள்ளது.

நாட்டில் பல் வேறு காரணங்களால் தற்கொலை செய்து கொள்வோர் தொடர்பான செய்திகள் அண்மை நாட்களில் அதிகளவில் பதிவாகியுள்ளது.

தனிநபர்கள் தற்கொலை செய்து கொள்வதுடன் சில சந்தர்ப்பங்களில் குடும்பமாகவும் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில் இது தொடர்பில் பேராதனை பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வுகளின்போது தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை தற்போது சடுதியாக அதிகரித்து வருகின்றமை வெளிக்கொணரப்பட்டுள்ளது.

நாட்டில் தற்கொலை செய்து கொள்ளும் தரப்பினரின் எண்ணிக்கை வருடமொன்றுக்கு 10 வீதத்தால் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதாகவும் வருடமொன்றுக்கு 3000 இற்கும் அதிகமானோர் தற்கொலை செய்து கொள்வதாகவும் பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார். (4-7)

## ஊசி மருந்து...

யில் சிகிச்சை பெற்றுள்ளார்.

எனினும் காய்ச்சல் குணமடையாமையால் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு தாதிய உத்தியோகத்தரால் ஊசி மருந்து ஏற்றப்பட்டது.

ஊசி மருந்து ஏற்றியதில் ஏற்பட்ட தவறு காரணமாக அவரின் இடது கையின் மணிக்கட்டுப் பகுதி பாதிப்படைந்தது.

இதனையடுத்து மருத்துவர்கள் அவரின் இடது கையின் மணிக்கட்டுப் பகுதியை அகற்றினர்.

எட்டு வயதுச் சிறுமிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்பட்ட பரிதாபச் சம்பவம் யாழ்ப்பாணத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை பிரஸ்தாப சிறுமி யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் மூன்றில் கல்வி கற்று வருகின்றார் என்பதும் பாடசாலையில் இடம்பெறும் நடன நிகழ்வுகளில் அந்த மாணவி பங்கேற்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4)

## தமிழர் பகுதி...

சட்டவிரோதமான செயல் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் தற்போது காணப்படுகின்ற பௌத்த பண்பாட்டு சின்னங்கள் தமிழ் மக்களின் உரிமைகளாகும்.

ஆனால்தற்போது புகுத்தப்படுகின்ற அம்சங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார். (4-7)

## ஜனாதிபதித்...

எதிர்க்கட்சித் தலைவராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் என்பதே இவர்களுக்குக் கூறக்கூடிய பதில் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்தார்.

தான் மரணத்திற்கு பயப்படும் கோழை அல்ல என்றும் எந்த ஒரு சவாலையும் சந்திக்க தயாராக இருப்பதாகவும், ராஜபக்ஷவுடன் தான் ஒருபோதும் ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

## மோ.சைக்கிள்...

திரும்புவதற்கு சமிக்ஞை காண்பித்த போது, யாழ்ப்பாணத்தில் இருந்து சில்லாலை நோக்கி பயணித்த குறித்த இளைஞனது மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் இருந்த தொலைபேசி தொடர்பு இணைப்பு கம்பத்துடன் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4,7,104)

## இனப்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அதிகாரிகளுக்கும் இலங்கையின் தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த வியாழக்கிழமை சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக மெய்நிகர் முறைமையில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் சார்பில் இரு அதிகாரிகளும் தமிழ் அரசியல் கட்சிப் பிரதி நிதிகளின் சார்பில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் அக்கட்சியின் பேச்சாளர் சுரேன் குருசுவாமி ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது அண்மைய காலங்களில் தமிழ் மக்கள் முகங்கொடுத்து வரும் பிரச்சினைகள் தொடர்பில் ஐ.நா அதிகாரிகளிடம் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

குறிப்பாக வட, கிழக்கு மாகாணங்களில் படையினர் வசமுள்ள தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றபோதிலும், யதார்த்தபூர்வமாக அதற்குரிய நடவடிக்கைகள் உரியவாறு முன்னெடுக்கப்படவில்லை என்றும், பெருமளவான காணிகள் இன்னமும் படையினர் வசமே இருப்பதாகவும் தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் விசனம் வெளியிட்டனர்.

அதுமாத்திரமன்றி, கடந்த சில மாதங்களாக வட, கிழக்கு மாகாணங்களில் தீவிரம் பெற்றுள்ள தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகள் குறித்து ஐ.நா அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. (4-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மெகா பவர்
திகதி 03/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1574
E 07 08 15 25 65
63584

தன நிதானய
திகதி - 2023.09.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1256
L 12 14 41 67 L
18534

Lucky 7
திகதி 03.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0052
L7 இலக்கம் 0 8
மீனம் 7 5 2 8 8 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3468
சீட்டிழுப்பு திகதி 03.09.2023
S 20 36 39 44
S 32507

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.09.03
சீட்டிழுப்பு இலக்கம் 535
கும்பம் 02 07 28 30 கும்பம்

மஹஜன சம்பத
திகதி 2023/09/03
சீட்டிழுப்பு இலக்கம் 5226
M 4 3 1 8 7 8

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2200
வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.03
தினம் ஞாயிற்றுக்கிழமை
07 11 18 56 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,607,212.40
53484 808

சனிதா
திகதி 2023.09.03 வெற்றி வாரம் 4361
32 45 47 71 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,254,292.00
88425 691

சசிரி
371
2023.09.03
கபிலம்
24 38 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,590,880/-

ரூசி
சீட்டிழுப்பு வாரம் 3912
வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.09.03
தினம் ஞாயிற்றுக்கிழமை
39 43 52 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,597,092/-
91684 394

திகதி 03.09.2023 வெற்றி வாரம் 1376 வர்ணம் மஞ்சள்
Y 01 24 46 54 64
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 435,491,524.20
70395 901
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 51,731,768/-
வெற்றி வாரம் : 2026
சீட்டிழுப்புத் திகதி : 2023.09.03
24 47 50 68 V
75762 940

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாட்டை இழந்த ஹயஸ் வீட்டுக்குள் புகுந்து விபத்து

## ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் மோட்டார் சைக்கிளை மோதி விபத்தை ஏற்படுத்தித் தப்பிய ஹயஸ் வாகனம் சிறிது தூரத்திலேயே வீட்டு மதிலை உடைத்து உள்ளே பாய்ந்ததில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் காலில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இருந்து கொக்குவில் நோக்கி அதி வேகமாக பயணித்த ஹயஸ் வாகனம், கே.கே.எஸ். வீதியில் உள்ள நாச்சிமார் கோயில் முன்பாக உள்ள வளைவில் வீதியின் மறுபுறத்தில் - எதிர்த்திசையில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞரை மோதியது.

விபத்தின்பின்னரும் நிறுத்தாது தப்பிச் சென்ற அந்த ஹயஸ் வாகனம், சிறிது தூரம் பயணித்து, பூநாறி மரத்தடியில் உள்ள வளைவில் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் மறுபுறம் உள்ள பாலத்தைப் பாய்ந்து வீட்டுக்குள் புகுந்தது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் காலில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து வாகனத்தை மீட்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இரவு ஒரு மணி தாண்டியும் வாகனத்தை மீட்கும் முயற்சிகள் நடந்த வண்ணம் இருந்தன.

விபத்துத் தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப் படாத நிலையில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (4.7)


SILVER SHIELD

மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7187)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 08.08.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

## இராஜதுரை இராஜேஸ்வரி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 06.09.2023 நாளை மறுதினம் அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் பகல் 12.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும் (16925)

இராஜகிரி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

இங்ஙனம் :
குடும்பத்தினர்

## உழவு இயந்திரம்...

உழவு இயந்திரம் கால்வாயில் பாய்ந்தது விபத்துக்குள்ளாகியுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முரசுமோட்டை பகுதியில் நேற்று இரவு ஏழு முப்பது மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து முரசுமோட்டையில் அமைந்துள்ள தன்து வீட்டுக்கு செல்வதற்காக உழவு இயந்திரத்தில் பயணித்த பொழுது வேகக்கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் அருகில் இருந்த கால்வாயில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

சம்பவத்தில் சாரதி காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4.7)

## சுகாதார...

குறித்த பிரேரணையில் கையெழுத்திட்டுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது எதிர்த்து வாக்களிக்க வுள்ளதாக தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியினால் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் 06 ஆம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ள நிலையிலேயே இலங்கை தமிழரசுக்கட்சி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியன இவ்வாறு தெரிவித்துள்ளன. (4.7)


பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு பகல் நேர பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.
வயது : 30 - 65
(யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை)
தொடர்புகளுக்கு
076 097 3121

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16913)
076 825 7716 (ஆகாஸ்)

விசா விண்ணப்பம்
கனடா பிரான்ஸ் லண்டன்
ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா,பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் ஆகிய விசாக்கள் பெற்றுத் தரப்படும்.ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்
கனடாவில் வேலைவாய்ப்பு 47 விசாக்கள் மட்டும் கையிருப்பு உள்ளது
முடிவுத்திகதி (20.09.2023)
தொடர்பு : 9.00 am - 6.00 pm
குறிப்பு : அனைத்துத் தகவல்களும் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும் (நிபந்தனைக்குட்பட்டது)
AIRR VISA CENTRE,197 MAIN STREET JAFFNA.
077 266 6429,021 221 0599
077 877 4838
(16916)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

CANADA VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7191)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள்
V2 TRAVELS
வயது :30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
சம்பளம் - 30'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-7191)

வெளிநாடுகளுக்கான DHL பொதிகள் சேவை
மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
T.P : 0777 55 45 28
321, K.K.S. Road, Jaffna.
(16905)

கார் மாத வாடகைக்கு

Altro, Renault
கார்கள் மாத வாடகைக்கு உண்டு
077 332 2433
யாழ்ப்பாணம்
(16931)

தேவை
நோயாளி பாவனைக்கு தலை,கால் உயரத்தை மாற்றக் கூடிய கட்டில் (ICU Bed) விற்பனைக்கு அல்லது வாடகைக்கு வைத்திருப்பவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்
(16924)
076 803 5188

காணி விற்பனைக்கு
ராஜ பாதை வீதி , கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய முன் வீதியில் (மிக அண்மையில்) 11 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உள்ளது.
(16934)
077 307 5198


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org